சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் சென்னை – 08

ந களஎண்6890 /அ5/2023 நாள் 09.10..2023

பொருள் பள்ளிக்கல்வி – சென்னை மாவட்டம். தமிழ் மொழி இலக்கிய திறனாய்வுத் தேர்வு-15.10.2023 அன்று நடைபெறுகிறது, நடை பெறும் தேர்வுக்கு தேர்வு மைய பெயர்ப்பட்டியல் மற்றும் தேர்வுக்கூட நுழைவுத் சீட்டுகள் பதிவிறக்கம் செய்தல்-சார்ந்து

பார்வை சென்னை – 06 அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித ந, க,எண் 0012929/டி(3)/2023 நாள் 06.10.2023

பார்வையில் காணும் அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடிதத்தின் படி தமிழ் மொழி இலக்கிய திறனாய்வுத் தேர்வு 15.10.2023 அன்று நடைபெறுகிறது. நடைபெறும் தேர்வுக்கு வருகைபுரியும் மாணவர்களின் பெயர்ப்பட்டியலினை தேர்வு மையம் வாரியாக www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் 09.10.2023 பிற்பகல் முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என அரசுத்தேர்வுகள் இயக்ககம் தெரிவித்துள்ளது, எனவே ஒவ்வொரு தேர்வு மைய முதன்மைக்கண்காணிப்பாளர்கள் தவறாமல் பெயர் பட்டியலினை பதிவிறக்கம் செய்து கொள்ள இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது

தேர்வுகூட நுழைவுச்சீட்டு

மேற்படி தேர்விற்கான தேர்வுக்கூட நுழைவுச்சீட்டுக்களை 09.10.2023 பிற்பகல் முதல் பள்ளித்தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளம் மூலம் தங்கள் பள்ளிக்கான User Id /Password.-ஐ கொண்டு பதிவிறக்கம் செய்து கொள்ளலாம், தமிழ்மொழித்தேர்வு இலக்கிய திறனறித்தேர்வு விண்ணப்பித்துள்ள மாணவர்களுக்கு தேர்வு கூட நுழைவுச்சீட்டுகளை சம்பந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள் பதிவிறக்கம் செய்து வழங்கவும் , தேர்வு மைய விவரத்தினை அம்மாணவர்களுக்குதெரிவிக்கவும் தலைமையாசிரியர்களுக்கு முதல்வர்களுக்கு இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்,

தேர்வர்களின் தேர்வுகூட நுழைவுச்சீட்டுகளில் பெயர் / பிறந்த தேதி ஆகியவற்றில் திருத்தம் எதும் இருப்பின் திருத்தத்தினை சிவப்பு நிற மையினால் சுழித்து சரியான பதிவினை குறிப்பிட்டும், ஒளிப்படத்தில் திருத்தங்கள் ஏதேனும் இருப்பின் தேர்வரின் புதிய ஒளிப்படத்தை உரிய இடத்தில் ஒட்டி பள்ளி தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் சான்றொப்பம் மற்றும் பள்ளி முத்திரையுடன் தேர்வெழுத அத்தேர்வர்களுக்கு அனுமதி வழங்க தேர்வு மைய முதன்மைக்கண்காணிப்பாளரிடம் செய்யுமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

தேர்வு மைய முதன்மைக்கண்காணிப்பாளர்கள் மற்றும் தேர்வு மைய தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் தேர்வு மைய பெயர்ப்பட்டியல் மற்றும் தேர்வுக்கூட நுழைவுச்சீட்டுகள் பதிவிறக்கம் செய்து கொள்ள பள்ளித் தலைமையாசிரியர்கள்/முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/-

முதன்மைக் கல்வி அலுவலர்

சென்னை

பெறுநர்

1 அனைத்துப் பள்ளித்தலைமையாசிரியர்கள்/முதல்வர்கள் , சென்னை மாவட்டம்

2 மாவட்டக்கல்வி அலுவலர்கள் சென்னை மாவட்டம் தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.